பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு எந்த வட்டாரத்தில் தொழு நோய் 2 அல்லது 3 சதவிகிதம் அளவில் இருக்கிறதோ அந்த வட்டாரத்தி லுள்ள சிறு பிள்ளைகளுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. தொடக்க கால கட்டத்தில் இந்தப் பரிசோதனையை பொதுமக்கள் அறிந்து கொள்வார்களே யானல் இந்த நோயினின்றும் காத்துக் கொள்ளலாம். நோயையும் விரட்டி விடலாம்.

Low level areas in Nungambakkam

* 418 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the dumping of garbage in low level areas in Nungambakkam at Madras is done without being covered by a layer of sand or mud thus allowing it to emanate bad smell; and

(b) if so, the details thereof and steps taken to prevent the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த நுங்கம்பாக்கத்தில் மட்டுமல்ல, ராஜா அண்ணாமலைபுரத்திலும் இம்மாதிரியாக குப்பைகளை எல்லாம் போட்டு குறிப்பாக பஸ் வழி அந்த இடத்தின்வழி பிரயாணம் செய்யும்போது, 4-இ, 21-எ பஸ்களில் போகும்போது பிரயாணிகள் ஒரு ஐந்து நிமிட நேரத்திற் காவது மூக்கைப் பிடித்துக்கொண்டு போக வேண்டிய நிலை இருக்கிறது. இம்மாதிரி லோ லெவிங் ஏரியாக்களில் டம்ப் செய்யும் நேரங்களில், அல்லது டம்ப் செய்தால் அந்த வாசனை வராத அளவிற்கு ஏற்பாடுகளை செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சமுதாயத்தில் எந்த ஒரு மாற்றத் தைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு ஒரு எதிர்ப்பு வரும். அதேபோல் பள்ளத்தை நிரப்பும் காரணத்தினுல் முதலில் நாற்றம் வரத்தான் செய்யும். அதை அடியோடு தடுக்கமுடியாது. பள்ளத்தை நிரப்புவதற்கு பெரும்பாலும் நகரத்திலுள்ள குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டி, அதன் மீது மணலைக் கொட்டுவது என்ற முறையில்தான் மணல் நிரப்பப்படுகிறது. முதலில் குப்பையைக் கொட்டி அதை சமன்செய்து அதன் மேல் மணலைக் கொட்ட வேண்டியிருக்கிறது. ஐம்பது-நூறு வண்டி குப்பை கொட்ட வேண்டியிருக்

கிறது. சமன் செய்து மணலைக்கொண்டு வந்துகொட்டும்போது இடையில் மழை பெய்தோ அல்லது சாக்கடைத் தண்ணீர் அதில் கலந்துவிட்டாலோ நாற்றம் அதிகமாகிறது.

ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்தக் கஷ்டத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இலாகாவைக் கேட்டால் முறைப்படி செய்வதாகத்தான் அவர்கள் சொல்வார்கள். முறைப்படி செய்கிற காரியத்தில் இவ்வளவு லாரி குப்பை என்று குப்பையைக் கொட்டிவிட்டு, அதன் மீது மணலைப் போடுகிறார்கள் என்று தான் அவர்களைக் கேட்டால் சொல்வார்கள். இடைக்காலத்தில் ஓரளவிற்கு நாற்றம் இருக்கத்தான் செய்யும். முழுவதையும் மூடிவிட்ட பிறகு அது நமக்குப் பயன்படுகிற பூங்காவாக மாறும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, though Madras has been a City since one or two centuries, certain areas within Madras have the appearance of backward villages. The health conditions and other conditions have not been improved after so many years. May I know the reasons for such things and will the Government take steps to see that every part becomes City?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the question is not clear. I am not able to follow the question.

MR. DEPUTY SPEAKER: I am also not able to follow it.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி குப்பைக் கூளங்களைக் கொட்டி அதன் மேல் மணல் போட்டு, அதன் மேல் வீடுகள் கட்டப்படு கின்றன. அப்படிக் கட்டப்படுகிற வீடுகள் காலக்கிரமத்தில் உள்ளே இறங்கி விடுகின்றன. அதைத் தடுக்கும் முறையில், அங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் பூங்கா வைத்துக்கொள்ளலாம், வீடுகள் கட்டக்கூடாது என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, குப்பை மேலே வீடு கட்டுகிற அளவுக்கு கட்டடக்கலை வளர்ந்து இருக்கிறது. கட்டுகிறவர்கள் என்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்தது தான் அது. குட்டை உள்ள இடத்தில், களி மண் உள்ள இடத்தில் வீடுகள் கட்டத் தடை இருக்கிறது. அந்தத் தடையை மீறிக் கட்டுவதற்கும் சில முறைகள் இருக் கின்றன. டவுன் பிளானிங் சட்டப்படி இந்த இடத்தில் கட்டலாம், கட்டக் கூடாது என்று இருக்கிறது. நகரமைப்புத் திட்டத்தின் கீழும் சில முறைகள் இருக்கின்றன. அதன் படிதான் கட்டப்படுகிறது.

1973 மார்ச் 19]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட குப்பைக்கூளங்கள் போடப்படுகின்ற இடங்களில் ஏதாவது ஆசிட்டுகள் தெளிக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே அதிலிருந்து வருகின்ற நாற்றத்தைப் போக்குவதற்கும், நோய்க்கிருமிகள் பரவாமல் இருப்பதற்கும் ஒரு விதமான மருந்து தெளிக்கப்படுகிறது.

Swing fog also is regularly used and fog malathion as well as pyrethrum solution is used. என்று கூறப்பட்டுள்ளது.

இதற்குத் தமிழிலே சொல்லப்படுகிற சொற்களை நான் தெரிந்து கொள்ளவில்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பள்ளத்தை அடைக்க இந்த குப்பைக்கூளங்களைப் போடுகிறார்கள். இதை அதற்காகப் பயன்படுத்தாமல், அதை கம்போஸ்ட் உரமாக, நல்ல உரமாக்கி செய்தால் அது நல்ல பலனைத் தரும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த இடத்தில் வரப்போகிற பூங்காவிற்கு அது நல்ல கம்போஸ்ட் உரமாக இருக்கும்.

Water Pollution of Adyar River

* 419 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Four-member Committee went into the Water Pollution of the Adyar River; and

(*b*) if so, the details of the composition of the Committee and the terms of reference?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த நீரைக் கடலில் நேரடியாகக் கலக்கச் செய்வதன் மூலம் அதன் நிலைமை மாறும், அதைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கடல் நீரைக் கலக்கச் செய்வதன் மூலம் அந்த நீர் நிலையில் இருக்கும் அழுக்குத் தன்மையைத்